# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

IA.No.795/2018  In  OS.No.27/2015                    Date: 09.09.2024

PW1-குமார்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா சொத்து வீட்டுமனைகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் மொத்தம் 5 வீட்டுமனைகள் சம்பந்தப்பட்டுள்ளது. அவற்றின் மனை எண்கள் எனக்கு தெரியாது. அவற்றின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. ஜக்குபந்தியும் தெரியாது. அந்த சொத்துக்களை நான் கிரையம் வாங்கியுள்ளேன். ஆனால் இதுவரை கிரைய ஆவணம் எழுதி கொள்ளவில்லை. ஒரு மனைக்கு மட்டும் கிரைய ஆவணம் உள்ளது. இந்த தாவா பற்றி எனக்கு 3 வருடங்களுக்கு முன்பு தெரியும். தாவா சொத்தில் வீடு கட்ட நான் கட்டிட அனுமதி வாங்கியுள்ளேனா என்றால் கிராம பஞ்சாயத்து என்பதால் வாங்கவில்லை. நான் கட்டியுள்ள வீடு குடியிருக்க தகுதியற்றது என்றாலும் அத்துமீறி பெயரளவில் குடிசை தான் போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தற்போது அங்கு வசிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 2001 முதல் மசையன்தெரு, நைனாம்பட்டி, போடிநாயக்கன்பட்டி அஞ்சல் என்ற முகவரியில் தான் வசிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்க்கவில்லை. நான் தாவா சொத்தில் எந்த வீட்டுமனையும் கிரையம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் என்னிடம் கிரைய முன்பணத்தை திருப்பி செலுத்திவிட்டு கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுத்துவிட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் எழுத்து பூர்வமான கிரைய ஒப்பந்தம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் ரூ.4 லட்சம் பெற்று கொண்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் சுவாதீனம் ஒப்படைத்ததற்கும் எழுத்து பூர்வமான ஆவணம் இல்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் மீது பரிகாரம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. 1, 2 எதிர்மனுதாரர்கள் வஞ்சகக்கூட்டு சேர்ந்து என்னை ஏமாற்றுவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக நான் பெற்றுள்ள ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்திற்கு மோசடியான ஆவணம் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதிக்கு

தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்காமல் இருப்பதை சாதகமாக பயன்படுத்தி கொண்டு நான் பொய்யாக இத்தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தான் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு இம்மனுவை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இம்மனு செலவு தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-குமார்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.